1982 மார்ச் 1]

இதிலே-இந்த கம்ப்யூட்டரிலே எந்த மாறுதலையும் செய்ய முடியாது. தனியாக, கையாலேதான் எழுத வேண்டும். அப்படி எழுதப்பட்டவைகள்தான் இந்த 908 மாணவர்களுமே தவிர, கம்ப்யூட்டரிலே தவறு ஏற்பட்டது, ஆகவே கையினாலே எழுதினார்கள் என்பது தவறு. கம்ப்யூட்டரிலே எந்த தவறும் ஏற்படவில்லை. கம்ப்யூட்டரிலே தவறு ஏற்படுவதற்கும் வழியில்லை.

கம்ப்யூட்டரிலே தவறு ஏற்பட்டால் இன்றைக்கு தினம் ஆயிரக் கணக்கிலே மனிதர்கள் சாகவேண்டியிருக்கும். அப்படி கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதிலே தவறு ஏற்படவில்லை. இன்றைக்கு மனிதனை விட தவறு மிகமிக குறைவாகச் செய்கிறது என்று கூட சொல்லலாம். ஆனால் நாம் தருகிற இன்புட் அதிலே போடுகிற விவரங்கள் எல்லாம், தவறு வரும்போது, கம்ப்யூட்டர் அதற்கேற்ப தான் வேலை செய்யுமே தவிர இன்னும் சொல்லப்போனால் இது தவறு என்று கூட அடித்துத் தந்து விடும்—அதற்கு ஒரு உதாரணம் தான் இந்த டேட் ஆப் பர்த் தப்பாக 11.11.11. என்று அடித்து வெளியே வந்தது. அதைப் பார்த்த உடன் இது தவறு என்று நாம் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்த முறையிலே வைத்திருக்கிறார்கள். கிராஸ் செக் இருக்கிறது. நாமே நம்முடைய கல்வி அதிகாரிகளை வருடம் தோறும் கூப்பிட்டு, சென்ற ஆண்டு ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், அவர்களுக்கு எதெது சொல்லித் தரவேண்டுமோ அவைகளைச் சொல்லித் தந்து, ஒரு வாரம் அல்லது 4, 5 நாட்கள் டிரெயினிங் தந்து அப்புறம் அவர்களைப் பயன்படுத்துகிறோம். வேறு எங்கேயும் இப்படிப்பட்ட டிரெயினிங்கை கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகின்றவர்களுக்குத் தருவதில்லை. ஆகவே நாம் நம் அளவிலே தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முசிறியிலுள்ள மக்கள் அங்காடியில் அரசால் வழங்கப்படும் குறைந்த விலை துணிகள்.

*வினா எண். 288—**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முசிறியில் உள்ள மக்கள் அங்காடியில் அரசால் வழங்கப்படும் குறைந்த விலை (கண்ட்ரோல் கிளாத்) துணிகள் முழுமையுமாக எல்லா வார்டுகளுக்கும் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எல்லோருக்கும் வழங்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) முசிறி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலும், முசிறி கூட்டுறவு விவசாய வங்கியிலும் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டை உள்ளவர்களைத் தவிர மற்ற இடங்களில் அதாவது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகளில் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு மேற்படி சங்கமும் வங்கியும் கட்டுப்பாடு துணிகளை விநியோகம் செய்யவில்லை. முசிறியிலுள்ள எல்லா குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கும் கட்டுப்பாடு துணிகளை விநியோகம் செய்ய வேண்டும் என்று மேற்படி சங்கத்திற்கும் வங்கிக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

கிராமிய கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் மூலம் கடன் பெறுவதற்கான வழிமுறைகள்.

***வினா எண். 289— திரு. சி. கணேசன் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமிய கூட்டுறவு விவசாய கடன் வழங்கும் சங்கத்தில் கடன் பெறும் விவசாயி தன் சொத்தின் பொறுப்பிலேயே கடன் பெற அரசு வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புதிதாகக் கொண்டு வரப்படவிருக்கும் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய கூட்டுறவுச் சட்டம் அமுலுக்கு வந்த பின்பு கிராமிய கூட்டுறவு விவசாய சங்கங்கள் உறுப்பினர்களின் நிலம் அல்லது அசையாச் சொத்தின் மீது பொறுப்புரிமையை ஏற்படுத்திக் கடன் வழங்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கூட்டுறவுச் சட்டம் இயற்றக் கூடிய நேரத்தில் புறம்போக்கு நிலங்களைக் கையில் வைத்து இருக்கும் விவசாயிகளுக்கும் அந்த நிலத்தின் பேரில் கடன் கொடுப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களைக் கையில் வைத்திருப்பதே சட்டத்திற்குப் புறம்பானது. ஆக்கிரமிப்பு என்ற முறையில் அந்தத் தவறைச் செய்து விட்டு, மேற்கொண்டு சலுகைகள் பெற இயலாது. அந்த ஆக்கிரமிப்பை சட்ட ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டால், அவர்களே அதைத் தன்னுரிமையாக வைத்துக் கொள்ளலாம் என்று சட்டப்படி செய்து கொண்டு விட்டால், அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கிடைக்கச் செய்யலாம்.